“சித்ரா பௌர்ணமி நாளதுவுமா இன்னும் இழுத்து போத்திட்டு தூங்கிட்டு இருக்கா பாரு" என்றதில் தொடங்கியது என் நாள். “எப்ப பாரு இந்த கிழவிக்கு என்ன திட்டிட்டே இருக்கணும், இன்னிக்கு திட்ட சித்ரா பௌர்ணமி கிடைச்சிடுச்சா?" என்று முணுமுணுத்த படியே எழுந்தேன் அன்று.

வீட்டில் எல்லோரும் சித்ரா பௌர்ணமி கோவிலுக்கு போறாங்க. வழக்கமாக கோவிலுக்கு போவதே பிடிக்காத எனக்கு கரூர் செல்லாண்டியம்மன் கோவிலுக்கு அத்தை, மாமா குடும்பத்தோடு போவது தெரிஞ்சு துள்ளி குதித்து எழுந்தேன். குடும்பத்தோட கோவிலுக்குப் போவதுனா என்ன சும்மாவா? ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் தான். பெருசுங்க ஒரு பக்கமும், சிறுசுங்க ஒரு பக்கமும் உட்கார்ந்து ஒரே கும்மாளம் தான். பஸ்ஸில் போகிற வழியெல்லாம் ஜன்னலில் தலையை நீட்டி ரோட்டில் போகிறவர்களை எல்லாம் வம்பிழுத்துட்டு, சின்னதா ஏதாச்சும் கடையை, பார்த்தாலே வண்டியை நிறுத்தி பாதி கடையை விலைக்கு வாங்கி, வாங்கின தீனியெல்லாம் பஸ்ல இருக்கிற ஆடியோ சிஸ்டமே கதறுகிற அளவுக்குப் பாட்டு போட்டு டான்ஸ் ஆடிக்கொண்டே சாப்பிடுவதும் ம்ஹ்ம்... எல்லாம் ஒரு குஷிதான்.

இதெல்லாம் ஒருபுறம் இருக்க, இன்னொரு புறம் கரூர்ல இருக்கிற காவிரி ஆற்றில் குளிப்பது இன்னொரு குஷிதான். ஏனென்றால், என் பாட்டி சின்ன வயசில் சித்ரா பௌர்ணமி அன்று குடும்பத்தோட ஆற்றங்கரையில் உட்கார்ந்து நிலாச்சோறு சாப்பிட்ட கதை, பள்ளிகூடத்துக்கு போக கூடாதுன்னு வாத்தியார்கிட்ட இருந்தும், அம்மாகிட்ட இருந்தும் தப்பிச்சு ஒளிய இடமில்லாமல் அவங்க போகிற வரைக்கும் தண்ணிகுள்ள மூச்சு பிடிச்ச கதை, ஆற்றுக்கு அடியில் இருக்கும் கூழாங்கல்லை எடுத்து அஞ்சாங்கல் ஆடிய கதை, துணி துவைக்க போகிறேன் என்று வீட்டில் இருக்கும் எல்லா துணிகளையும் எடுத்து வந்து ஒரு நாள் முழுக்க ஆற்றங்கரையில் உட்கார்ந்து மீன் பிடிச்ச கதை, அந்த மீனை வீட்டுக்கு எடுத்து வந்து அம்மாவிடம் அடிவாங்கிய கதை, ஆற்றங்கரையிலிருந்து வாய்க்காலுக்கு போகும் தண்ணீரில் பந்தயம் வச்சு விளையாண்ட கதைன்னு பாட்டி சொன்ன பல கதைகள் எனக்கு ஞாபகம் வந்தது. அதையெல்லாம் நானும் பார்க்கபோறேன், அனுபவிக்கப்போறேன் என்று தெரிஞ்சு படு குஷியாக போனேன்.

கரூரும் வந்தது. எல்லோரும் இறங்கி கோவிலுக்கு போனோம். அம்மா மாறருங்க, அத்தை மாறருங்க எல்லாம் பொங்கல் வைத்து சமையல் செய்ய கிளம்பியாச்சு. அப்பா மாறருங்க, மாமா மாறருங்க எல்லாம் ஒரு ஓரமா பாய் விரிச்சு சீட்டு விளையாட ஆரமிச்சாச்சு. எங்களை மாதிரி பொண்டு பொடுசுகளையெல்லாம் கூட்டிகிட்டு, “ஆற்றுக்கு போகலாம் வாங்கடா" என்று எங்க பாட்டி கூட்டி போனாள்.

எல்லாரையும் கூட்டி வந்து ஒரு மைதானத்துல பத்து பதினஞ்சு லாரிகள் மணல் அள்ள, தூரத்துல இருக்கிற குட்டையை காட்டி, "இதுதாண்டா ஆறு, எல்லாரும் போய் குளிங்க-னு சொல்லிட்டாங்க. முட்டி அளவு கூட இல்லாத தண்ணீரை பார்த்து கோபத்தில், “ஏன் கிழவி இந்த நதியில் தான் நீ மூழ்கி முத்து எடுத்தியா?" என்று கேட்டேன். “நாங்க விளையாண்டது ஆறு, இது வெறும் ஆறு மாதிரி. நாங்க அனுபவிச்சது எல்லாம் உங்களலால அனுபவிக்க முடியாது. காலம் மாறிப்போச்சு, காலத்தோட எல்லாமும் மாறிப்போச்சு ம்ஹ்ம்... என்னத்த சொல்ல" னு சொல்லி எங்களை சமாதானப் படுத்தி குளிக்கவச்சு அழைத்து சென்றுவிட்டாள்.

சாமி கும்பிட்டாச்சு, ஆற்று மணலில் விளையாடியாச்சு, சமைச்ச சாப்பாட்டை சாப்பிட்டாச்சு, வந்த வேலை எல்லாம் முடிஞ்சாச்சு, எல்லாரும் கிளம்பியாச்சு. இதற்கப்புறம் நான் பார்த்த எல்லா நதிகளைப் பார்த்தும் எனக்கு ஒரு ஏக்கம் இருந்துகொண்டேயிருந்தது. கதைகளில் படித்த பச்சைப்பசேல் என்கிற பூமி, வற்றாத நதி எல்லாம் கதைகளோடே போய்விடுமா?" என்ற பயம் எப்போதுமே இருந்தது.

நம்ம காவிரிக்கு நீர் வராததற்கு கர்நாடகா நமக்கு தண்ணீர் விடாதது தன காரணம் என்று யாரோ ஒருவர் சொல்வதை கேட்டு நானும் அவர்கள் மேல் கோபப்பட்டேன். குடகில் ஆரம்பித்து பூம்புகார் போகிற வரை இந்த நதிக்கும் அதை சார்ந்த மக்களுக்கும் எவ்வளவு பிரச்சனைகள்? எவ்வளவு ரத்தங்கள்? எத்தனை பலிகள்? அவ்வளவு தண்ணீரை வைத்து அவர்கள் என்ன செய்கிறார்கள்? கொஞ்சம் கூட அவர்களுக்கு மனிதாபிமானமே இல்லை என்று திட்டி தீர்த்தேன். கர்நாடகா என்று பெயர் கேட்டாலே காதை பொத்திக்கொள்வேன். என் கோபம் எதிரில் வரும் மனிதர்கள் மேலேயும் எதிரொலிக்க ஆரமித்தது. அந்த மாநிலத்தில் இருந்து வரும் மனிதர்களை பார்த்து முட்டாள் தனமாக திட்டினேன், வார்த்தைகளால் தாக்கினேன். ஒரு நாள் எங்க வீட்டிற்கு வந்த என் அப்பாவின் நண்பரை வீட்டிற்குள்

வரக்கூடாது என்று ஆர்ப்பாட்டம் பண்ணினேன். பொறுத்தது எல்லாம் போதும் என்று விட்டார் பாருங்க ஒரு அடி. ஹப்பா! எனக்கு அப்படியே பொறிகலங்கி போச்சு. இதற்கு காரணமும் கர்நாடகா தான் என்று கோபம் வந்தது. “உங்களுக்கு நம்ம ஊர் மேலயும் நம்ம மக்கள் மேலேயும் கொஞ்சம் கூட அக்கறை இல்ல, உங்களுக்கு மட்டும் குடிக்க தண்ணி இருந்த போதுமா? மத்தவங்களுக்கு வேண்டாமா?" என்று வயதிற்கு மீறியதை எல்லாம் பேசினேன். பதிலாக அப்பா ஒரே வாக்கியம் தன சொன்னார், "எதையும் முழுசா தெரியாம முடிவுக்கு வரக்கூடாது. முழுசா தெரிஞ்சிட்டு வந்து பேசு" என்று சொல்லி கிளம்பிவிட்டார்.

அதற்கப்புறம் தான் அதைப்பற்றி படிக்க ஆரமித்தேன். 1892 ல் இருந்து இன்று வரை உள்ள காவிரி வரலாறை படித்தேன். கட்டிய அணைகள், பகிர்ந்துகொண்ட தண்ணீர் அளவுகள், மாநிலங்களுக்கு இடையே உள்ள பிரச்சனைகள், அதன் காரணங்கள் இது எல்லாவற்றைப் பற்றி என் பாட்டியிடம் சொன்னேன். எதுவுமே புரியாத என் பாட்டி, “இது எதுவும் எனக்கு தெரியாது, புரியாது, எனக்கு தெரிஞ்சுது எல்லாம் ஒண்ணே ஒன்னு தான் எல்லா பிரச்சனைகளுக்கும் காரணம் நம்ம போல மனுஷங்க தான்" என்னறாள். புரியாத நான் "எப்படி?" என்று கேட்டேன். “எங்க காலத்துல தண்ணி கரைபுரண்டு ஓடியதற்கு காரணம், எங்களுக்கு விவசாயம் தவிர வேற எதற்கும் அதிகமா தண்ணீர் தேவைப்பட்டது இல்ல. இப்போ இருக்கிற மாதிரி ஆற்று மணல் நாங்க அள்ளவும் மாட்டோம், அதனால் நிலத்தடி நீரும் வற்றாமல் இருந்துச்சு. நகரமயமாக்குறேனு இருக்கிற எல்லா நிலத்தையும் **ஆக்ரமிச்சிச்சு எல்லமரத்தையும் வெட்டியா. அதனால இப்போ மழையும் இல்ல, மரங்களும் இல்ல. அப்போ நாங்க விவசாயத்துக்கு பயன்படுத்தின தண்ணிய விட மூணு மடங்கு தண்ணிய நீங்க** செலவு செய்றீங்க. ஆறு குளங்கள் எல்லாம் வற்றியாச்சு. நிலத்துல இப்போ இருக்கிற தண்ணியையும் உறுஞ்சி எடுத்தாச்சு. இப்போ பயன் படுத்த தண்ணி இல்ல. அதன் பலன் தான் இப்போ அனுபவிக்குறீங்க" என்று சொல்லி கிளம்பிவிட்டாள்.

இது எனக்குள் ஒரு தாக்கத்தைக் கொண்டு வந்தது. ஒரு நாட்டோட முன்னேற்றத்திற்கு நகரமும், தொழிற்சாலையும் மட்டுமா முக்கியம்? விவசாயமும் முக்கியம் தான். **அதற்காக தொழிற்சாலைக** இருக்காக் கூடாதா? நீரும் வேண்டும், தொழிற்சாலையும் வேண்டும், விவசாயமும் வேண்டும். ஒன்று கிடைக்க இன்னொன்றை இழந்துதான் ஆகணுமா?

இதற்கு என்னதான் தீர்வு? என்று ஆயிரம் கேள்விகள் எனக்கு உதித்தது. ஆம், இதற்கு வழிகள் உள்ளது. நகர்ந்த மேலை நாடுகள் விவசாயம், தொழிற்சாலை என்று இரண்டையுமே விட்டுக்கொடுக்காமல் இருக்கிறார்கள். அதனால் நாடும் செழிப்பாய் இருக்கிறது, மக்களும் செழிப்பாய் இருக்கிறார்கள். இது தெரியாமல் நாம் முட்டாள் தனமாய் சண்டை போட்டுகொண்டு இருக்கிறோம். **இனிமேலாவடு இது போல் இல்லாமல் புராணக்கதைகளில் வரும் நம் நாடு போ**ல் நம் பூமியை பச்சைப்பசேல் என்று உருவாக்கவேண்டும் என்ற ஞானம் பிறந்தது. அதற்கான பாதையில் இன்று நான்... எவ்வளவு பேர் என்னோடு?